04.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோடைக் காலங்களில் பால் உற்பத்தி பாதிப்பதை தடுப்பதற்கான வழிமுறைகள்

கோடைக் காலங்களில் பால் உற்பத்தி பாதிக்கப்படுவதை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து திண்டுக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ராஜேந்திரன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: கோடைகாலத்தில் ஏற்படும் அதிக அளவு வெப்பத்தினால் கால்நடைகளுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக பசுந்தீவன பற்றாக்குறை, கடுமையான வெப்ப நிலை, பராமரிப்பு முறை போன்றவற்றால் கறவை மாடுகளில், பால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. வறட்சியால் ஏற்படும் பசுந்தீவன குறைபாடு, பால் உற்பத்தி குறைவதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

கோடைகாலத்தில் ஈக்களின் பெருக்கம் அதிகமாகி, அவை அடிக்கடி வட்டமிடுவதாலும், மேலே உட்கார்ந்து தொல்லை கொடுப்பதாலும் கறவை மாடுகள் அமைதியற்ற சூழ்நிலையில் இருக்கும். இதனால் பால் உற்பத்தி பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. ஈக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மருந்து தெளிக்கலாம். மேலும், மாட்டுத் தொழு மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கூடுதலாக, எருக்குழியில் மருந்து தெளிப்பதன் மூலம் ஈக்களின் உற்பத்தி இருக்காது.

உயர் இன கால்நடைகள் 80 டிகிரி பாரன்ஹீட், இந்திய இனங்கள் 95 டிகிரி, கலப்பின கறவை மாடுகள் 85-90 டிகிரி வெப்ப நிலையிலும் பாதிக்கப்பட்டு வருகின்றன. பசுந்தீவனம் தவறாமல் கொடுக்கும் போது, பால் உற்பத்தி பாதிக்கப்படுவதை தடுக்க முடியும்.

காய்ந்த புல் மற்றும் குழிப்புல் ஆகியவற்றோடு, அடர் தீவனங்களையும் கறவை மாடுகளின் உணவில் சேர்க்க வேண்டும். அதே போல் 4 அல்லது 5 முறை குடிநீர் கொடுக்க வேண்டும். கறவை மாடுகள் தண்ணீர் தேவையை 3-ல் 2 பங்கினை பகல் நேரங்களில் மட்டுமே பூர்த்தி செய்கிறது. ஒரு லிட்டர் பால் உற்பத்திக்கு, ஒவ்வொரு மாட்டுக்கும் மூன்றிலிருந்து 3.5 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே கறவை மாடுகளின் தண்ணீர் தேவையை முறையாக கண்காணிக்க வேண்டும். வெயில் அதிகமாக இருக்கும் போது கறவை மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது என தெரிவித்துள்ளார்.

## வைக்கோல் கொள்முதல் விலை உயர்வு

தேனி மாவட்டத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் 2 ஆம் போக நெல் அறுவடை முடிவடையும் நிலையில் உள்ளது. மாவட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் கால்நடை வளர்ப்பு குறைந்து வருவதாலும், கால்நடைகளுக்கு போதிய அளவில் பசுந்தீவனம் கிடைத்து வருவதாலும், நெல் அறுவடை நடைபெற்ற வயல்களில் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்ய உள்ளூர் வியாபாரிகள் ஆர்வம் காட்டவில்லை. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மட்டுமே வைக்கோல்களை சேமித்து வைக்கின்றனர்.

இந்த நிலையில், தற்போது கால்நடை தீவனத்துக்கும், எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கும் வைக்கோல் மற்றும் வைக்கோல் கூழம் கொள்முதல் செய்ய கேரள வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் கடந்த வாரம் வரை ரூ.900-க்கு விற்கப்பட்ட ஒரு குழி (60 செண்ட்) பரப்பளவில் உள்ள வைக்கோல், தற்போது ரூ.1,300 வரை விற்பனையாவதாக விவசாயிகள் கூறினர்.

## நீலகிரியில் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டைப் போலவே இருக்கும்: உபாசி வேளாண்மை நிலையம் தகவல்

நீலகிரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டைப் போலவே இருக்கும் என உபாசி வேளாண் நிலையம் தகவல் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது காலநிலை மாற்றம் காரணமாக சிறு தேயிலை விவசாயிகள் போதிய மகசூல் இன்றி கடும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர். பெரிய தேயிலைத் தோட்டங்களில் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் முதல் 3 மாதங்களில் நிர்ணயித்த பசுந்தேயிலை மகசூல் கிடைக்கும் என வேளாண் அறிவியல் நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, ஆராய்ச்சி நிலையத் துணை இயக்குநர் உதயபானு கூறியதாவது:

கடந்த 2 மாதமாக மாவட்டத்தில் கடும் வெயில் நிலவி வருகிறது. இதனால், தேயிலைச் செடிகளில் வறட்சி ஏற்பட்டு சிவப்பு நிற சிலந்திப் பூச்சிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. பகலில் 23 முதல் 24 டிகிரி செல்சியஸும், இரவில் 13 முதல் 14 டிகிரி செல்சியஸ் வரையும் வெப்பநிலை இருந்து வருகிறது.

மழை பெய்தால் மட்டுமே ஏப்ரல், மே மாதங்களில் உள்ள சீசன் காலத்தில் கூடுதல் மகசூல் கிடைக்கும். இருப்பினும், கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் முதல் 3 மாதங்களில் பெரிய தேயிலைத் தோட்டங்கள் சார்பில் 30 லட்சம் கிலோ தேயிலைத் தூள் வரை உற்பத்தி மேற்கொள்ளப்பட வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

**நீலகிரியில் சீசனுக்கு தயாராகும் பூங்காக்கள்**

கோடை சீசனையொட்டி, நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான பூங்காக்களைப் பொலிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, சிம்ஸ் பூங்கா, காட்டேரிப் பூங்கா உள்ளிட்ட பூங்காக்களில், சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் லட்சக்கணக்கான மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ள மலர்ச் செடிகளை வைத்து பூங்காவை அழகுபடுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. பகலில் கடும் வெயில் நிலவி வருவதால் நடவு செய்யப்பட்டுள்ள மலர்ச் செடிகளை காய்ந்து விடாமல் பாதுகாக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பூச்செடிகள் வரும் மே மாதம் சீசனுக்கு முன்பாக பூத்து கோடை சீசனுக்கு சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்தாக அமையும் என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை நிலையத்தில் ரூ3.10 கோடிக்கு மஞ்சள் விற்பனை

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2,400 குவிண்டால் மஞ்சள், ரூ.3.10 கோடிக்கு விற்பனையானது.
திருச்செங்கோடு பரமத்திவேலூர் சாலையில் உள்ள திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஒரு குவிண்டால் விராலி, ரூ8,699 முதல் ரூ.11,403 வரையும், கிழங்கு ரகம் ரூ.8,599 முதல் ரூ.9, 499 வரையும், பனங்காலி ரகம் ரூ10,919 முதல் ரூ20,299 வரையும் ஏலம் போனது. மொத்தம் விற்பனைக்கு வந்த 5ஆயிரம் குவிண்டால் மஞ்சள் சுமார் 3கோடியே 10லட்சத்துக்கு ஏலம் போனதாக மேலாண் இயக்குநர் ஹேமா தெரிவித்தார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## இயற்கை தந்த சன்ஸ்கிரீன்

ஆவாரம்பூவும், அதன் இலைகளும் கடுமையான வெயில் காலத்தில் சூரியக்கதிர்கள் ஏற்படுத்தும் பாதிப்பைத் தடுக்க இயற்கை நமக்கு அளித்துள்ள இயற்கையான சன்ஸ்கிரீன். இலைகளின் மேல் உள்ள சிலிகா படலமும், பூக்களின் நிறமியும் இப்பணியை அற்புதமாகச் செய்கின்றன. கடுமையான வெயிலில் எல்லாப்பூக்களும் வாடி வதங்கி விடும். ஆனால் ஆவாரம்பூவும் அதன் இலைகளும் வாடுவதே இல்லை. வெயில் காலத்தில் வியர்வையால் ஏற்படும் துர்நாற்றத்தை நீக்க ஆவாரம்பூ உதவுகிறது. இதனால் குளியல் பொடியில் சேர்ப்பர். தொப்பி, பந்தலில் ஆவாரம்பூ இலைகளை வைத்தால் வெயில் தாக்குதல் குறையும்.

## ஒற்றை தென்னையில் ஒன்பது கிளைகள்: வேளாண் துறை அதிகாரிகள் வியப்பு

தஞ்சாவூர்: தஞ்சாவூர் அருகே, ஒரு தென்னை மரத்தில், ஒன்பது கிளைகள் உள்ளது, அப்பகுதி மக்களை மட்டுமின்றி, வேளாண் துறை அதிகாரிகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அடுத்த மகிழங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் நடராஜன்; இவரது மனைவி சங்கீதா. இவர்களுக்கு சொந்தமான, 3 ஏக்கர் நிலத்தில் மா மரம், பலா மரம், வாழை மரம் மற்றும், 250க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இவர்கள் தோப்பில் உள்ள ஒரு தென்னை மரத்தின் தலை பகுதியில், கடந்த ஆண்டு, ஒரு கிளை வெடித்து, அதிலிருந்து இரண்டு கிளைகள் முளைத்தன. அதன் பின், அந்த மூன்று கிளைகளில் இருந்தும், தலா,

இரண்டு முளைத்து, தற்போது ஒரே தென்னை மரத்தில், ஒன்பது கிளைகள் வளர்ந்து உள்ளன. அனைத்து கிளைகளிலும், பாலை விட்டு காய்கள் காய்ப்பது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து, அப்பகுதி வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: ஒரு மரத்தில், இரண்டு கிளைகள் இருக்கும். அதிலும் ஒரு கிளை தான் காய்க்கும். இதில், மூன்று கிளைகள் முளைத்து, அதிலிருந்து தலா, இரண்டு கிளைகள் வந்து ஒவ்வொன்றும் காய்ப்பது அதிசயமாக உள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தெரிவித்து உள்ளோம். ஆய்வு பணிக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## வரத்து அதிகரிப்பால் பூக்கள் விலை சரிவு

சின்னமனூர்:சீலையம்பட்டி மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து அதிகரித்துள்ளது. முகூர்த்தம், கோயில் திருவிழாக்கள் இல்லாததால் விலை சரிந்துள்ளது.

சீலையம்பட்டி தினசரி பூ மார்க்கெட்டிற்கு வேப்பம்பட்டி, சீலையம்பட்டி, அய்யம்பட்டி, கோட்டூர் பகுதியில் விளையும் பூக்கள் கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து மத்திய கேரள பகுதிக்கும், மதுரை, திருச்சி பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

பூக்களின் விலை நிலவரம்(கிலோவில்): மல்லிகை ரூ.80, செண்டுப்பூ ரூ.30, சம்பங்கி ரூ.80, அரளி ரூ.60, ரோஜா ரூ.25, துளசி ரூ.20, கோழி கொண்டை ரூ.25, வாடாமல்லி ரூ.25, மரிக்கொழுந்து ரூ.40, பட்டு ரோஸ் ரூ.120.

கமிஷன் கடை உரிமையாளர் குமார்,""கோடை சீசன் துவங்கி விட்டதால் பூக்கள் வரத்து அதிகரித்துள்ளது. தேவையை விட வரத்து அதிகமாக இருப்பதாலும், கோயில் திருவிழா, முகூர்த்த சீசன் இல்லாததாலும் விலை சரிந்துள்ளது. வரும் வாரங்களில் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது,' என்றார்.

## திசு வாழை சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

புத்தூர் அக்ரஹாரம்: தமிழ்நாடு வேளாண் பல்கலையின் கண்டுபிடிப்பான 'திசு' வாழையை, சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பாரம்பரிய வாழை ரகங்களான பூவன், ரஸ்தாளி, தேன் வாழை ஆகியவற்றுக்கு இணையாக புதிய ரகமான திசு வாழையை, விவசாயிகள் ஆர்வத்துடன் பயிர் செய்கின்றனர். திசு வாழை என்பது 'சோதனை குழாய்' குழந்தை என்பது போல், நல்ல வீரியமுள்ள அதிக லாபம் தரக்கூடிய வாழை ரகங்களில் இருந்து எடுக்கப்படும். விதைகளை பக்குவப்படுத்தி, அதற்கு குறைந்த தண்ணீரிலும், பூச்சிகள் தாக்குதலில் நின்று வளரவும், தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களும் கொடுக்கப்பட்டு, சிறிய பாலிதீன் பைகளில் வளர்க்கப்படும் வாழை கன்றுகளே திசு வாழை ரகமாகும். இந்த ரக வாழைகன்றுகளை, சேலம் புத்தூர் அக்ரஹாரம் பகுதியில், பல நூறு ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டுள்ள சாமந்தி செடிகளுக்கு நடுவே தற்போது பயிரிட்டு வருகின்றனர். திசு வாழை இரண்டு மாதங்களில் பலன் தர துவங்கி விடும். மற்ற ரகங்களை விட, ஒரு தாரில், 200 பழங்களுக்கு குறையாமல் காய்க்கும் என்பதால், இந்த திசு வாழையை இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டுள்ளனர்.

## மீன்வரத்து அதிகரிப்பு மீனவர்கள் மகிழ்ச்சி

திருவாடானை:தொண்டியில் மீன்வரத்து அதிகரித்துள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.எஸ்.பி.பட்டினம் முதல் திருப்பாலைக்குடி வரையிலான நீண்ட கடற்கரை பகுதியாக தொண்டி திகழ்கிறது. இப்பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் நாட்டுபடகுகள் மூலம் மீன்பிடி தொழில் செய்கின்றனர். நேற்று முன்தினம் இரவு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் நேற்று அதிகாலை கரை திரும்பினர்.

கிட்டதட்ட 15 டன் வரை மீன்கள் சிக்கியதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இது குறித்து மீனவர் சீனி கூறுகையில்,"" எப்போதும் இல்லாத வகையில் மீன் பாடு அதிகமாக இருந்தது. இதிலும் சிரேயா மீன் அதிகளவில் சிக்கியது. இவை கிலோ ரூ.150க்கு விற்பனையானது. இனிவரும் நாட்களிலும் மீன்பாடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்," என்றார்.

## சிங்கி இறால் மீன் சீசன் துவக்கம் பிடிக்க பாம்பன் மீனவர்கள் தயார்

ராமேஸ்வரம்:ராமேஸ்வரம் அருகே பாம்பனில் சிங்கி இறால் மீன் பிடிக்க பிரத்யேக வலைகளுடன் நாட்டுப்படகு மீனவர்கள் தயாராகி வருகின்றனர்.

வங்க கடல், பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடா கடலில் பாம்பன் நாட்டுபடகு மீனவர்கள் சீசனுக்கு ஏற்ப சூடை வலை, நண்டு வலை, சீலா மீன் வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பது வழக்கம்.

பவளப்பாறைகளின் இடுக்குகளை வசிப்பிடமாக கொண்டுள்ள சிங்கி இறால் மீன் கோடை காலமான ஏப்.,மே மாதங்களில் வெளியேறும். இவற்றை பிடிக்க பிரத்யேக வலைகளை தயார் செய்யும் பணியில் நாட்டுப்படகு மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். சிங்கி இறால் மீன் பெரும்பாலும் சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தரத்திற்கு ஏற்ப ஒரு கிலோ சிங்கி இறால் மீன் ரூ.3 ஆயிரம் வரை விலை போகும். இதனால் சிங்கி இறால் பிடிப்பதில் மீனவர்கள் அதிக ஆர்வத்துடன் உள்ளனர்.

பாம்பன் மீனவர் டிரோஸ் கூறுகையில்,"" 30 மீட்டர் நீளமுள்ள சிங்கி மீன் வலை தயார் செய்ய ரூ.12 ஆயிரம் வரை செலவாகும்.

தற்போது குறைந்த அழுத்த காற்று வீசுவதால் பாறைகள் நிறைந்த கடல் பகுதியில் வலையை விரிப்போம். 24 மணி நேரத்திற்கு பிறகு வலையை

எடுத்தால் சிங்கி மீன்கள் அதிகமாக சிக்கும். சூறாவளி காற்று வீசினால் சிங்கி மீன்கள் சிக்குவது அரிதாகி விடும்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கணிணியை விட நெல் மணியே சிறப்பு என விவசாயத்தில் ஈடுபடும் கணிணிதுறை பட்டதாரி இளம்பெண்



கீழக்கரை :ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே தந்தைக்கு உதவியாக விவசாயப் பணிகளில் ஈடுபட்டுவரும் கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடப்பிரிவில் தங்கபதக்கம் பெற்ற பட்டதாரி பெண் வித்யா, வேளாண் இயந்திரங்கள் இயக்குவதிலும் சாதனை படைத்துவருகிறார் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே காஞ்சிரங்குடியைச் சேர்ந்த விவசாயி ஆதித்தன். எருதுகட்டு விழா பேரவைத் தலைவராக உள்ளார். இவரது மனைவி காளிமுத்து. காஞ்சிரங்குடி ஊராட்சி தலைவராக உள்ளார். இவர்களது கடைசி மகள் வித்யா, 24. இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் இன்ஜினியரிங் கல்லூரியில் எம்.இ., கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடப்பிரிவில் தங்கபதக்கம் பெற்றுள்ளார்.

தற்போது தந்தைக்கு உதவியாக விவசாயப் பணிகளில் ஈடுபடுகிறார். அதில் ஒரு பகுதியாக டிராக்டரில் கலப்பை இணைத்து உழவு செய்தல், நாற்று நடுதல், களை பறித்தல், உரம் இடுதல், பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல், அறுவடை செய்தல், கதிர் அடித்தல் உள்ளிட்ட விவசாயப் பணிகளில் ஈடுபட்டி வருகிறார். டிராக்டர், கதிர் அடிக்கும் இயந்திரம் உள்ளிட்ட கடினமான வேளாண் கருவிகள் இயக்குவதிலும் ஈடுபட்டு ஆச்சரியபடுத்துகிறார்.

வித்யா கூறுகையில், நாங்கள் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் விவசாயப் பணிகளில் ஆர்வம் செலுத்தி வருகிறேன். அப்பாவுக்கு உதவியாக உழவு செய்தல், களை பறித்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். டிராக்டர் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை இயக்குவதை பெருமையாக கருதுகிறேன். பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம். படித்து முடித்த பின் வேலை, திருமணம் என்ற பந்தத்தை தாண்டி பெண்கள் சுயதொழில்களில் கவனம் செலுத்தவேண்டும் என்கிறார்.

## பெங்களூருக்கு ஏற்றுமதியாகும் வைக்கோல் கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து கர்நாடக மாநிலம் பெங்களூருக்கு தினமும் வைக்கோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நெல்லை விட வைக்கோலுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தின் டெல்டா மாவட்டங்கள் மற்றும் வட மாவட்டங்களில் நெல் சாகுபடி அதிகளவில் நடந்து வருகிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு நெல் அறுவடை தொடங்கி தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் நெல் மூட்டைகளுக்கு விவசாயிகள் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை. அரசு அறிவித்த ஆதாரவிலை கூட கிடைக்காமல் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

ஒரே நேரத்தில் நெல் மூட்டைகள் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது அதே நேரத்தில் வைக்கோலுக்கு நல்ல விலை கிடைத்திருப்பதால் விவசாயிகள் சற்று மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேய்ச்சல் இடங்கள் பற்றாக்குறை போன்ற காரணத்தால் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால் வைக்கோலுக்கு கிராக்கி இல்லாத நிலையும், அதனை வாங்க முன்வராத நிலையும் இருந்தது.

ஆனால் தற்போது தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் கர்நாடகா மாநிலம் பெங்களூர் பகுதியிலிருந்து வியாபாரிகள் வைக்கோல் வாங்க விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகின்றனர். பழங்களை பழுக்க வைக்க வைக்கோல் தேவை என்பதாலும் பெங்களூரு, கிருஷ்ணகிரி பகுதியில் அதிகளவு கால்நடைகள் இருப்பதாலும் அங்கு வைக்கோல் தேவை அதிகமாக உள்ளது.

தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் நெல் அறுவடை தீவிரமாக இருப்பதால் வைக்கோலை வாங்க லாரிகளுடன் வியாபாரிகள் வருகின்றனர். நெல் விலை வீழ்ச்சியடைந்தாலும் வைக்கோலுக்கு ஏகப்பட்ட கிராக்கியும், விலையும் கிடைத்திருப்பதால் விவசாயிகள் ஓரளவிற்கு மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பொருட்களை கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகள் பணத்துடன் வருவதால், தேர்தல் ஆணையத்திடம் அவர்கள் எந்தவொரு ஆதாரமும் காண்பிக்க முடியாது. எனவே, அவர்களுக்கு சிறப்பு சலுகை அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## கோடை வெயிலால் நோய் தாக்குதல் உளுந்தூர்பேட்டை பகுதியில் புடலங்காய் விளைச்சல் பாதிப்பு

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே சேந்தநாடு, கல்லமேடு, மட்டிகை உள்ளிட்ட சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவு தோட்டக்கலை பயிரான புடலங்காய் பயிரிட்டு வருகின்றனர். விவசாயிகள் தங்களது நிலத்தில் பந்தல் வைத்து விதை போட்டு பயிரிடப்பட்டுள்ள புடலங்காய் பயிரை அதிக அளவு பயிரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது கடந்த ஒரு மாதகாலமாக புடலங்காய் அறுவடை செய்து வரும் நிலையில் கடந்த ஆண்டை விட தற்போது குறைந்த அளவிலான மகசூல் கிடைத்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தபோது, மழையை நம்பி புடலங்காய் பயிரிட்டு வந்தாலும், தற்போது முன்கூட்டியே கடுமையான கோடை வெயிலின் தாக்கம் இருப்பதால் செடி காய்ந்து கருகும் நிலை உள்ளது.

மேலும் செடியின் இலைகள் கருகியும், பூக்கள் கொட்டியும் வருவதால் அதிக அளவு புடலங்காய் காய்க்காமல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டுகளை போல் அல்லாமல் புடலங்காய் நீண்டு வராமல் குட்டையாக உள்ளதால் உரிய எடை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ 8 முதல் ரூ10 வரையில் விற்பனை போனது, ஆனால் இந்த ஆண்டு ரூ 5 முதல் ரூ 6 வரை மட்டுமே விற்பனை ஆவதால் புடலங்காய் பயிரிட்டுள்ள விவசாயிகள் கடும் பாதிப்பு அடைந்துள்ளனர். எனவே வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து செடியினை தாக்கி வரும் நோயினை போக்க உரிய ஆலோசனைகளை வழங்கி மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## கொங்கணாபுரத்தில் ரூ.70 லட்சத்திற்கு பருத்தி விற்பனை 40 மூட்டை எள் ஏலம்

இடைப்பாடி, : கொங்கணாபுரத்தில் நடைபெற்ற ஏலத்தில் 3500 மூட்டை பருத்தி ரூ.70 லட்சத்திற்கு விற்பனையானது. மேலும், 40 மூட்டை எள் ரூ.3 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் இயங்கி வரும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சனிக்கிழைதோறும் பருத்தி ஏலம் நடைபெறும். நேற்று நடந்த ஏலத்திற்கு சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், ஈரோடு மற்றும் கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள், வியாபாரிகள் என 600க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பின்னர், நடைபெற்ற ஏலத்தில் டிசிஎச் ரகம் குவிண்டால் ரூ.5650 முதல் ரூ.6446 வரையிலும், பிடி ரகம் குவிண்டால் ரூ.4600 முதல் ரூ.4950 வரையிலும் ஏலம் போனது. ஆகமொத்தம் 4500 மூட்டை பருத்தி ரூ.70 லட்சத்திற்கு ஏலம் போனது. இதேபோல், 40 மூட்டை எள் ரூ.3 லட்சத்திற்கு விற்பனையானது. வெள்ளை எள் கிலோ ரூ.76.30 முதல் ரூ.89.90 வரையிலும் ஏலம் போனது.

## சப்போட்டா விலை சரிவு கிலோ ரூ.20க்கு விற்பனை

சேலம், : சேலம் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து மார்க்கெட்டுக்கு சப்போட்டா வரத்து அதிகரிப்பால், கிலோ ரூ.20 என விலை சரிந்துள்ளது.சேலம் சுற்றுவட்டார பகுதிகளில் சப்போட்டா அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது சப்போட்டா சீசன் களை கட்டியுள்ளதால், வழக்கத்தை விட வரத்து அதிகரித்துள்ளது. சேலம் மார்க்கெட்டுக்கு தினசரி 30 டன் சப்போட்டா விற்பனைக்கு வருகிறது.

இங்கு விற்பனைக்கு வரும் சப்போட்டாவை தள்ளுவண்டி வியாபாரிகள், நடைபாதை வியாபாரிகள் வாங்கி சென்று விற்பனை செய்கின்றனர். சிலர் மினிடோர் ஆட்டோவில் வைத்து சப்போட்டா விற்பனை செய்து வருகின்றனர். தற்போது வரத்து அதிகரிப்பால் விலை சரிந்துள்ளது. கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பு கிலோ சப்போட்டா ரூ.30 முதல் ரூ.40 என விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில நாட்களாக கிலோ ரூ.20 என விற்கப்படுகிறது. விலை சரிவால் விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மொரப்பூரில் நிலக்கடலை அறுவடை துவக்கம்

அரூர் : மொரப்பூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை நன்கு விளைந்துள்ளது. தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூர், கம்பைநல்லூர், ஒடசல்பட்டி கூட்ரோடு, கடத்தூர், அரூர் பகுதிகளில் நிலக்கடலை சுமார் 750 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது நிலக்கடலை

நன்கு விளைந்து அறுவடை செய்யும் பணி துவங்கியுள்ளது. 100 நாள் பயிரான நிலக்கடலையை விளைவிக்க ஒரு ஏக்கருக்கு 80 கிலோ நிலக்கடலை விதைகள் தேவைப்படுகிறது. மருந்து, விதை உள்ளிட்ட பராமரிப்பு செலவுகளுக்கு ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் ஆகிறது. பராமரிப்பை பொறுத்து பச்சை நிலக்கடலை ஏக்கருக்கு 20 மூட்டை கிடைக்கும். தற்போது மூட்டை ரூ.1800 வரை விலை போகிறது. இந்த ஆண்டு விளைச்சலும் அதிகமாக உள்ளதால், நல்ல லாபம் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## விளை நிலங்களில் இயற்கை உரத்தை இடுவதால் மகசூல் அதிகரிப்பு

குன்னூர், உரம், பூச்சி கொல்லி மருந்துகளின் விலை உயர்வால் விளை நிலங்களுக்கு விவசாயிகள் ஆடு, மாடு சானங்களை பயன்படுத்தி இயற்கை உரக்கை பயன்படுக்கி வருகின்றனர். நீலகிரி மாவட்டக்கில் கேயிலை பயிரிடப்பட்டு வந்த நிலையில் கேயிலைக்கு உரிய விலை கிடைக்காததால் பெரும்பாலான விவசாயிகள் மலைத்தோட்ட காய்கறி விவசாயத்திற்கு மாறினர். உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், கேரட், நூல்கோல், காலிபிளவர், முட்டைகோஸ், மேராக்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களை பயிரிட்டு வந்தனர். இந்நிலையில் உரம் விலை பன்மடங்கு உயர்ந்து வருவதால் ஆடு, மாடு சானங்களில் இருந்து இயற்கை உரம் தயாரித்து விளை நிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் அதிகளவில் மகசூல் கிடைத்து வருகிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், இடுபொருட்கள், பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் மருந்துகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொழிலாளர்களின் சம்பளமும் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடியில் உள்ளனர். இதனால் ஒரளவிற்கு செலவை கட்டுப்படுத்த ஆடு, மாடு சானங்களின் மூலம் இயற்கை உரம் கயாரிக்கு விளை நிலங்களுக்கு உரமாக பயன்படுக்கி வருகிறோம். இகனால் களைகள் அதிகளவில் வந்காலும் அகனை அவ்வப்போது அப்புறப்படுத்தி பராமரிக்கப்படுவதுடன் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளை

ஊக்கப்படுக்கும் வகையில் அனைக்கு மானிய உகவிகளையும் தடையின்றி வழங்கினால் இத்தொழிலில் எவ்வித இடையூறுமின்றி மேற்கொள்ள இயலும் என கூறினார்.

## செவ்வந்தி விலை உயர்வு மல்லிகை விலை சரிந்தது

மதுரை, : வரத்து குறைவால் செவ்வந்தி பூ விலை கிலோ ரூ.80க்கு விற்பனையாகிறது. தொடர் வரத்து அதிகரிப்பால் மல்லிகைப்பூ விலை குறைந்து கிலோ ரூ.100க்கு விற்பனையாகிறது.மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட் சங்க தலைவர் மனோகரன் கூறுகையில், ''மல்லிகைப்பூ சீசன் ஆரம்பித்துள்ளதால் வரத்து அதிகமாக உள்ளது. இதனால், விலையும் கணிசமாக குறையும். கடந்த 3 மாதங்களாக திண்டுக்கல், நிலக்கோட்டை, கூடலூர், ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து செவ்வந்தி அதிகளவில் கொண்டுவரப்பட்டது. இதனால் விலை குறைவாகவே விற்பனையாகி வந்தது. தற்போது சீசன் முடிவடைந்துள்ளதால், வரத்து குறைவாக உள்ளது. இதனால் கிலோ ரூ.50 முதல் ரூ.60க்கு விற்பனையான செவ்வந்தி, தற்போது ரூ.80க்கு உயர்ந்துள்ளது.

## தரமான கம்பு உற்பத்தி முறைகள்

பழநி, : தரமான கம்பு உற்பத்தி முறைகள் குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.கம்பு இறவையாகவும், மானாவாரியாகவும் எல்லா வகை நிலங்களிலும் பயிர் ஏற்றவை. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 கொண்ட நிலங்கள் சிறந்தவை ஆகும். மானாவாரியில் பயிரிட ஜூலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களும், இறவைக்கு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் ஏற்றவை ஆகும். கே.எம்.2, கோ.(சியு).9இ, ஐசிஎம்வி.221 ஏற்ற ரகங்கள் ஆகும். மானாவாரியாக இருந்தால் எக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். இறவையாக இருந்தால் எக்டேருக்கு 3.75 கிலோ தேவைப்படும்.

வறட்சியை தாங்கி வளர பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமை 1 லிட்டர் நீரில் கலந்து கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊற வைத்து பின்பு நிழலில் உலர்த்தி தன் எடைக்கு உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். 1 எக்டேருக்கு 12.5 கிலோ நுண்ணூட்டச் சத்து இடவேண்டும். நிலத்தில் ஈரம் இருக்கும்போது விதைத்த 3வது நாள் அட்ரசின் 1 எக்டேருக்கு 500 கிராம் களைக்கொல்லி மருந்தினை 900 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். அடியுரமாக 50% தழைச்சத்து முழுவதுமாக மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தை இட வேண்டும்.

மீதமுள்ள 50% தழைச்சத்து உரத்தை நட்ட 15வது நாள் மற்றும் 30வது நாள் பிரித்து மேலுரமாக இடவேண்டும். விதைத்தவுடன் 4வது நாளும் பின்னர் 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மற்றும் காலநிலைக்கு தகுந்தவாறு நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 15 மற்றும் 30ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் பொருளாதார சேதார நிலை அறிந்து வேளாண்துறை அலுவலர் ஆலோசனையின்படி பயிர் பாதுகாப்பு மருந்துகள் உபயோகப்படுத்த வேண்டும்.
விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**பண்ணைக்குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்ட வேளாண் துறை விடுத்துள்ள அறிக்கை: சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் இதுவரை ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை மழை பெய்யும் காலங்களில் நிறைந்துள்ளது. இந்த நீரை பயன்படுத்தி நெல் உள்ளிட்ட பயிர்கள் விவசாயமும், மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழமரக்கன்று விவசாயமும் செய்யப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் இளையான்குடி வட்டாரத்தில் 13ஏக்கர், சிவகங்கை வட்டாரத்தில் 10ஏக்கர், மானாமதுரை வட்டாரத்தில் 12ஏக்கர், திருப்புவனம் வட்டாரத்தில் 1ஏக்கரில் மா, எலுமிச்சை, பப்பாளி, சப்போட்டா மரக்கன்றுகளை விசவசாயிகள் நடவு செய்துள்ளனர். சில பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்த்து வருமானம் ஈட்டுகின்றனர். பண்ணைக்குட்டைகளினால் விவசாயிகள் நன்கு பயனடைந்து வருகின்றனர். நீர்வடிப்பகுதி விவசாயிகள் அனைவரும் பண்ணைக்குட்டைகளில் நீரினை விவசாயம், பழமரக்கன்று வளர்ப்பிற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கோடைகாலத்தை பயன்படுத்தி பண்ணைக்குட்டைகள் அமைக்கலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலநிலைக்கு ஏற்றவாறு கம்புக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும் வேளாண்துறை ஆலோசனை

இளையான்குடி: தரமான கம்பு உற்பத்திக்கு காலமுறைக்கு ஏற்றவாறு தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என வேளாண் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.கம்பு இறவையாகவும், மானாவாரியாகவும் எல்லா வகை நிலங்களிலும் பயிர் ஏற்றவை. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 கொண்ட நிலங்கள் சிறந்தவை ஆகும். மானாவாரியில் பயிரிட ஜூலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களும், இறவைக்கு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் ஏற்றவை ஆகும். கே.எம்.2, கோ. (சியு).9இ, ஐசிஎம்வி.221 ஏற்ற ரகங்கள் ஆகும். மானாவாரியாக இருந்தால் எக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். இறவையாக இருந்தால் எக்டேருக்கு 3.75 கிலோ தேவைப்படும்.

வறட்சியை தாங்கி வளர பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமை 1 லிட்டர் நீரில் கலந்து கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊற வைத்து பின்பு நிழலில் உலர்த்தி தன் எடைக்கு உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். 1 எக்டேருக்கு 12.5 கிலோ நுண்ணூட்டச் சத்து இடவேண்டும். நிலத்தில் ஈரம் இருக்கும்போது விதைத்த 3வது நாள் அட்ரசின் 1 எக்டேருக்கு 500 கிராம் களைக்கொல்லி மருந்தினை 900

லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். அடியுரமாக 50 சதவீத தழைச்சத்து முழுவதுமாக மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தை இட வேண்டும்.

மீதமுள்ள 50 சதவீத தழைச்சத்து உரத்தை நட்ட 15வது நாள் மற்றும் 30வது நாள் பிரித்து மேலுரமாக இடவேண்டும். விதைத்தவுடன் 4வது நாளும் பின்னர் 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மற்றும் காலநிலைக்கு தகுந்தவாறு நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 15 மற்றும் 30ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் பொருளாதார சேதார நிலை அறிந்து வேளாண்துறை அலுவலர் ஆலோசனையின்படி பயிர் பாதுகாப்பு மருந்துகள் உபயோகப்படுத்த வேண்டும். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## ரூ.400லிருந்து 150 ஆக குறைந்தது கோவில்பட்டியில் வாழைத்தார் விலை சரிவு

கோவில்பட்டி, :கோவில்பட்டி மார்க்கெட்டிற்கு வாழைத்தார் வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. ரூ.400லிருந்து 150 ஆக குறைந்தது.தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக கடும் கோடைவெயில் நிலவி வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. விளைநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள விவசாய பயிர்கள் வெயிலின் வெப்பம் தாங்காமல் பாதிக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்திலும் தற்போது கடும் கோடை வெயில் அடித்து வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், கருங்குளம், ஆழ்வார்திருநகரி, பெருங்குளம், கோவில்பட்டி அருகே தோணுகால், வில்லிசேரி, மந்திக்கோப்பு மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழைகள் கோடை வெயிலின் வெப்பம் தாங்காமல் கருகி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கனர். இந்நிலையில் கோவில்பட்டி நகராட்சி தினசரி மார்க்கெட்டிற்கு இந்த பகுதிகளில்

இருந்து வாழைக்தார்களை லாரி, வேன்களில் கொண்டு வந்து விவசாயிகள் மொத்த கடை வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகின்றனர். கடும் வெயிலால் வாழைகள் சாய்ந்து வரும் நிலை இருந்தாலும் விளைச்சல் நன்றாக உள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு தினமும் வாழைத்தார்களின் வரத்து அதிகரித்துள்ளதால் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அதாவது மார்க்கெட்டில் ரூ.400க்கு விற்ற நாடு வகை பெரிய வாழைத்தார் தற்போது ரூ.150 ஆக குறைந்துள்ளது. இதேபோல் ரூ.100க்கு விற்ற நாடு சின்ன தார் ரூ.50க்கும், கற்பகவல்லி ரூ.500லிருந்து ரூ.250 ஆகவும், சக்கை ரூ.300லிருந்து ரூ.150 ஆகவும், கசலி தார் ரூ.150லிருந்து ரூ.50 ஆகவும், செவ்வாழை ரூ.600ல் இருந்து ரூ.400 ஆகவும் விலை குறைந்துள்ளது. இதுகுறித்து கோவில்பட்டி மார்க்கெட் மொத்த வியாபாரி பால்ராஜ் கூறுகையில், ஸ்ரீவைகுண்டம், கருங்குளம், திருச்சி, கோவில்பட்டி அருகே சுற்றுப்பகுதி கிராமங்களில பயிரிடப்பட்டுள்ள வாழைத்தார்கள் வெயிலால் சாய்ந்து வருகிறது.

வரத்து அதிகரிப்பால் வாழைக்தார்களின் விலை மிகவும் குறைந்துள்ளது. விலையை பொருட்படுத்தாமல் விவசாயிகள் தினமும் மார்க்கெட்டிற்கு லாரி, வேன்களில் வாழைத்தார்களை கொண்டு வந்து விற்று வருகின்றனர். விலை குறைவால் சிறிய மற்றும் சாலையோர கடை வியாபாரிகள், தள்ளுவண்டிகளில் விற்பனை செய்வோர் அதிகளவில வாங்கி சென்று விற்கின்றனர். இன்னமும் ஒரு சில வாரங்கள் கழித்து காற்று வீச தொடங்கும்போது, வாழைத்தார்களின் விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழக்கு விலை வீழ்ச்சி



பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கின் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

மரவள்ளி கிழங்கு பயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரமத்தி, கபிலர்மலை, அண்ணா நகர், வாழவந்தி, பெருங்குறிச்சி, சோழசிராமணி, திடுமல், பாகம்பாளையம், சின்னமருதூர், கூடச்சேரி, காசப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்து உள்ளனர்.

இந்த பகுதியில் விளையும் மரவள்ளி கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, செல்லப்பம்பட்டி, ஆத்தூர், மலைவேப்பங்குட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிப்ஸ் தயார் செய்பவர்களுக்கும், சேகோ தொழில் சாலைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>விலை வீழ்ச்சி</u>

மேலும் மரவள்ளி கிழங்கு அதில் உள்ள டார்ச் மற்றும் பாயிண்ட் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் 1 டன் மரவள்ளி கிழங்கு ரூ.5000 வரை விற்பனையானது.

ஆனால் இந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன் ஒன்று ரூ.4 ஆயிரத்து 200–க்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் மரவள்ளி கிழங்கின் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளதால் மரவள்ளி பயிரிட்டு இக்கும் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். வெயில் காலம் என்பதால் மரவள்ளி கிழங்கில் தண்ணீர் சத்து குறைந்து விடும். இதன் காரணமாக பாயிண்ட் அளவும் குறைந்து போனதால் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**காட்டு யானைகள் வருவதை தடுக்க மரத்தில் விளைந்துள்ள பலாப்பழங்களை உடனே அகற்ற வேண்டும் வனத்துறை அதிகாரி வேண்டுகோள்**



கூடலூர்,

காட்டு யானைகள் வருவதை தடுக்க மரங்களில் விளைந்துள்ள பலாப்பழங்களை உடனடியாக அகற்றி வனத்துறையினருக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கூடலூர் வனத்துறை அதிகாரி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>காட்டு யானை தாக்கி 3 பேர் சாவு</u>

கூடலூர் ஓவேலி பகுதியில் கடந்த 30–ந் தேதி காட்டு யானை தாக்கி ராதாகிருஷ்ணன் என்பவர் உயிரிழந்தார். மறுநாள் 31–ந் தேதி இரவு பந்தலூர் மேங்கோரேஞ்ச் பகுதியை சேர்ந்த மணிசேகர், கர்ணன் ஆகியோரை காட்டு யானை தாக்கி கொன்றது. 2 நாளில் 3 பேரை காட்டு யானை கொன்றதால் கூடலூர், பந்தலூர் பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது. மேலும் பல்வேறு கட்ட போராட்டங்களும் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் மனிதர்களை கொன்று வரும் காட்டு யானைகளை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் குடியிருப்புகள், விவசாய நிலங்களுக்குள் காட்டு யானைகள் நுழையாமல் இருக்க வனத்துறை சார்பில் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. இது குறித்து கூடலூர் வன அதிகாரி தேஜஸ்வீ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப் பட்டுள்ளதாவது:–

பலாப்பழங்களை வெட்டி அகற்ற வேண்டும்

கூடலூர் வன கோட்டத்தில் காட்டு யானைகள் தாக்கி 3 பேர் பரிதாபமாக இறந்துள்ளனர். இதனால் காட்டு யானைகள் ஊருக்குள் நுழையாமல் இருப்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. தற்போது பலாப்பழ சீசன் தொடங்கி உள்ளதால் காட்டு யானைகள் அதன் வாசனையை நுகர்ந்து குடியிருப்பு பகுதிக்கு வருகிறது.

எனவே விவசாய நிலங்கள், குடியிருப்பு பகுதியில் காணப்படும் பலா மரங்களில் விளைந்துள்ள அனைத்து பலாப்பழங்கள், காய்களை பொதுமக்கள், விவசாயிகள் தாங்களாகவே வெட்டி அகற்ற வேண்டும். இதன்மூலம் காட்டு யானைகள் வருவது கட்டுப்படுத்தப்படும். எனவே பொதுமக்கள், விவசாயிகள் வனத்துறைக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். ஏற்கனவே வனவிலங்கு–மனித மோதல்களை தடுக்க கூடலூர், பந்தலூர் பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தஞ்சையில் சுட்டெரிக்கும் வெயில் இளநீர், தர்பூசணி விற்பனை அமோகம்**



தஞ்சையில் சுட்டெரிக்கும் கோடை வெயிலின் தாக்கத்தால் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். இதனால் இளநீர், தர்பூசணி விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

கோடை வெயில்

கோடைகாலம் நடைபெற்று வருவதால் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் பகல் நேரத்தில் வீட்டை விட்டு வெளியே செல்வதற்கே பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். அப்படியே வெளியே செல்வதாக இருந்தாலும் கூட தலையை துணிகளால் மூடிக் கொண்டு செல்கின்றனர். சிலர் குடைகளை பிடித்து கொண்டு செல்கின்றனர். இருசக்கர வாகனங்களில் பின்னால் அமர்ந்து செல்பவர்களில் சிலர் குடையை பிடித்து கொண்டு செல்கின்றனர். அந்த அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. பகல் நேரத்தில் மின்விசிறிக்கு கீழே அமர்ந்திருந்தாலும் வெப்பகாற்று தான் வீசுகிறது. பகலில் தான் வெயிலின் தாக்கம் இருக்கிறது என்றால் இரவிலும் அதன் தாக்கம்

எதிரொலிக்கிறது.

இளநீர்,தர்பூசணி

இதனால் வியர்வை துளியால் நனைய வேண்டியது உள்ளது. இருசக்கர வாகனங்களில் செல்பவர்களின் முகத்தில் வெப்பகாற்று அனலாக வீசுகிறது. இதனால் கண் மட்டும் தெரியும் வகையில் முகத்தை துணியால் மூடி கொண்டு இருசக்கர வாகனங்களை ஓட்டி செல்கின்றனர். வெயிலின் தாக்கத்தால் இளநீர், தர்பூசணி, நுங்கு விற்பனை தஞ்சையில் அமோகமாக நடைபெற்று வருகிறது. தாகம் தணிப்பதற்காக பொதுமக்கள் அதிகஅளவில் இளநீர், தர்பூசணி, நுங்கு போன்றவற்றை வாங்கி சாப்பிடுகின்றனர். மேலும் ஆங்காங்கே தள்ளுவண்டிகளில் வெள்ளரி பிஞ்சுகளின் விற்பனையும் நடைபெற்று வருகிறது.

கத்திரி வெயில்

மேலும் குளிர்பானங்களும், சர்பத், ஜூஸ் போன்றவைகளும் அதிக அளவில் விற்பனை ஆகிறது. மதிய நேரத்தில் வீதிகளில் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாததால் வெறிச்சோடி காணப்படுகிறது. இப்போதே அக்னி நட்சத்திர காலத்தில் வெயில் கொளுத்துவதைபோல் கொளுத்துகிறது. தஞ்சையில் தற்போது 99 டிகிரி வரை வெயில் கொளுத்துகிறது. இன்னும் சில நாட்களில் 100 டிகிரியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெயிலின் உச்சகட்டமான கத்திரி வெயில் எனப்படும் அக்னிநட்சத்திரம் அடுத்த மாதம் (மே) 4-ந் தேதி தொடங்கி 28-ந் தேதி முடிவடைகிறது.

இப்போதே வெயிலின் தாக்கம் கடுமையாக இருப்பதால் அக்னி நட்சத்திர காலத்தில் இதைவிட கடுமையாக வெயில் இருக்கும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் உள்ளனர். கடந்த ஆண்டு தஞ்சையில் வெயில் கடுமையாக இருந்தது. இந்த ஆண்டு வெயிலின் தாக்கத்தை குறைப்பதற்கு மழை பெய்ய வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். வெயிலின் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை காத்து கொள்ள

நீர்ஆகாரங்களை அதிகஅளவு சேர்த்து கொள்ள வேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

## வாழைப்பழ உலரகத்தை வேளாண் வணிக ஆணையர் ஆய்வு



தொட்டியம் வாழை உற்பத்தியாளர் குழுவால் தொட்டியத்தில் அமைக்கப்பட்டுள்ள வாழைப்பழ கதிரொளி உலரகத்தை வேளாண் வணிக ஆணையர் சம்புகல்லோலிகர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவருடன் உலக வங்கி ஆலோசகர் முகமது இக்பால், இணை இயக்குனர் (வேளாண்மை) சவுந்திரராஜன், நீர்வள நிலவள திட்ட ஆலோசகர் ஆகியோர் வந்திருந்தனர். மேலும் அவர்கள் தொட்டியம் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் ரஸ்தாளி, பூவன், கற்பூரவள்ளி போன்ற பழுத்த பழங்களை தரமான தேனில் நனைத்து கதிரொளி மூலம் உலரவைக்கும் தொழில்நுட்ப முறைகளை பார்வையிட்டு மேம்பாட்டு செயல்முறை ஆலோசனை வழங்கினர். இந்த உலரகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட உலர் கீரைகள், உலர் தக்காளி, உலர் பருப்பு வகைகள், வாழைப்பழ சாக்லெட் முதலிய மதிப்பு கூட்டப்பட்டபொருட்களையும் பார்வையிட்டனர். தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் நிறுவனத்தின் பொதுச்செயலாளர் அஜித்தன், பொருளாளர் சுப்பிரமணியன், திருச்சி வாழை உற்பத்தியாளர் சங்க தலைவர் சுகுமார் மற்றும் வாழை சாகுபடி

விவசாயிகளும் உடன் இருந்தனர். அதன்பின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை திருச்சி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் என்.சர்புதீன், முசிறி வேளாண் வணிகத் திட்ட அலுவலர் புஷ்பா சிவக்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கர், கணேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

## விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: சீனி, கொண்டைக்கடலை விலை உயர்வு வரத்து குறைவே காரணம்



விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட்டில் வரத்து குறைவு காரணமாக சீனி, கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது.

<u>உளுந்து</u>

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.8,000 முதல் ரூ.10,000 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.9,100 முதல் ரூ.11,000 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.8,000 முதல் ரூ.8,400 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.8,500 முதல் ரூ.9,200 வரையிலும், துவரம் பருப்பு ரூ.12,500 முதல் ரூ.12,800

வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.7,800 முதல் ரூ.8,300 வரையிலும், பாசிபருப்பு 100 கிலோ மூடைக்கு ரூ.900 விலை உயர்ந்து ரூ.8,400 முதல் ரூ.9,100 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

மல்லி லயன் ரகம் 40 கிலோ மூடைக்கு ரூ.3,500 முதல் ரூ.4,000 வரை விற்பனை ஆனது. வத்தல் (குவிண்டாலுக்கு) சம்பா ரகம் ரூ.10,500 முதல் ரூ.11,500 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.11,000 முதல் ரூ.11,700 வரையிலும், முண்டு வத்தல் குவிண்டாலுக்கு ரூ.9,000 முதல் ரூ.10,000 வரையிலும் விலை சொல்லப்பட்டது.

<u>கடலை எண்ணெய்</u>

விருதுநகர் எண்ணெய் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் 15 கிலோவுக்கு ரூ.200 விலை உயர்ந்து ரூ.2,000 ஆகவும், தேங்காய் எண்ணெய் ரூ.1,605 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் ரூ.1,350 ஆகவும் விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு 80 கிலோ மூடைக்கு ரூ.300 விலை உயர்ந்து ரூ.5,600 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ மூடைக்கு ரூ.4,400 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,210 ஆகவும் விற்பனை ஆனது.

பாமாயில் 15 கிலோவுக்கு ரூ.80 விலை உயர்ந்து ரூ.1000 ஆகவும், நல்லெண்ணெய் 15 கிலோ ரூ.2,890 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது.

<u>சீனி</u>

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.200 விலை உயர்ந்து ரூ.3,810 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டாலுக்கு ரூ.200 விலை உயர்ந்து ரூ.5,800 ஆகவும், பொரிகடலை 55 கிலோவுக்கு ரூ.140 விலை உயர்ந்து ரூ.3,800 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,850 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,650 வரையிலும், மசூர் பருப்பு ரூ.8,200 முதல் ரூ.8,300 வரையிலும், ரவை 90 கிலோவுக்கு ரூ.3,215 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.2,995 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. ஆட்டா 50 கிலோ ரூ.1135 ஆகவும் விற்பனை ஆனது.

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,750 ஆகவும், ஏ ரகம் ரூ.12,750 ஆகவும், சி ரகம் ரூ.8,000 ஆகவும்,

ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,300 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.5,800 ஆகவும் விற்பனை ஆனது.

விருதுநகர் மார்க்கெட்டில் கடந்த வாரம் வரத்து குறைவு காரணமாக பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.